# சீர்காழி நகராட்சி
# சாதாரண கூட்டம்



2018–ம் ஆண்டு ஜனவரி மாதம் 25.01.2018 வியாழன் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கை.

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர், ஆணையர்
சீர்காழி நகராட்சி.

| | |
|---|---|
| பொருள் எண்.1 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.16022/2016/பி1 நாள்.13.12.2017 ஆம் தேதிய உத்திரவில், சீர்காழி நகராட்சிப் பகுதிகளில் கட்டி முடிக்கப்படாமல் உள்ள 300 தனி நபர் கழிப்பிடம் கட்டக்கூடிய பயனாளிகளுக்கு CSR நிதி மூலம் கட்டுவதற்க்கு கூடதலாக 1 Units க்கு ரூ.2000/– வீதம் 300 Units க்கு மொத்தம் ரூ.6 இலட்சம் வழங்க அனுமதித்து வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் , பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.<br><br>அ.கு – பதிவு செய்யலாம்.<br><br>நகர்மன்ற தீர்மான எண்–161 நாள்.25.01.2018. அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்.2 | சீர்காழி நகராட்சி – பொது சுகாதாரப் பிரிவு – TN51AZ6752 டம்பர் பிளேசர் லாரி வாகனத்தின் கிளர்ச்சி பிளேட் , கிளர்ச்சி அசமல் , கிளர்ச்சி பேரிங் பழுதடைந்துவிட்டதால் இயக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டு உள்ளதாலும் சீரமைத்து தர வேண்டியும் தற்போது உள்ள சூழ்நிலையில் வாகனம் பழுது ஏற்பட்டு இயங்காமல் போனதால் நகரில் குப்பைகள் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலையில் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 –ன்கீழ் மேற்கண்ட வாகனத்தை M.M.K ஆட்டோகேர் , சீர்காழி என்ற நிறுவனத்தில் விட்டு பழுது நீக்கம் செய்யப்பட்டது குறித்து பணிஆணை வழங்கி பணிகள் மேற்கொண்டமையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதி வழங்கலாம். |

<table>
<tr><td></td><td>(ந.க.எண்–4220/2017/எச்1)<br><br>நகர்மன்ற தீர்மான எண்–162 நாள்.25.01.2018. அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>பொருள் எண்.3</td><td>சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான ஈசானிய தெரு கலவை உரத்திடலில் உரம் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் மனித சக்தியை பெற்று பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த புள்ளி கோரியதில் 05.1.2018 அன்று கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்தாரரின் பெயர்</th><th>கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளி விவரம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.எல்.ஞானவேல்<br>பூந்தோட்டம் தெரு<br>ஊழியக்காரன் தோப்பு<br>சீர்காழி</td><td>நபர் ஒன்றுக்கு<br>நாள்ஒன்றுக்கு ரூ.393</td></tr>
<tr><td>2</td><td>கே.ஜீவானந்தம்<br>19/ஹ1, தேர்கீழ வீதி<br>சீர்காழி</td><td>நபர் ஒன்றுக்கு<br>நாள்ஒன்றுக்கு ரூ.398</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெறுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண்.1 –ல் கண்டுள்ள திரு.எல்.ஞானவேல் என்பவர் கொடுத்ள்ள ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் அதை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ.கு) ஈசானிய தெரு கலவை உரத்திடலில் உரம் தயாரிக்கும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணிகளை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.4317/2017/எச்.1)<br>நகர்மன்ற தீர்மான எண்–163 நாள்.25.01.2018. அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>பொருள் எண்.4</td><td>தமிழ்நாடு தொகுதி மறுவரையறை ஆணையர் கடிதம் எண்.3174/2017/EG.1, நாள்.24.11.2017–ன்படி சீர்காழி நகராட்சி வார்டு மறுவரையறை தொடர்பான Booklet தயார் செய்யவும், வரைபடங்கள் Auto cad-ல் தயார் செய்யவும் A2 & A3 அளவிலான Colour Print எடுக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூபாய். 2,00,000/– (இரண்டு லட்சம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு..<br>மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண்.3639–2017– எப்.1<br>நகர்மன்ற தீர்மான எண்–164 நாள்.25.01.2018. அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>பொருள் எண்.5</td><td>சீர்காழி நகராட்சியின் சுகாதார ஆய்வர் கொடுத்த குறிப்பின்படி டம்பர் பிளேசர் வாகனத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் 14 எண்ணிக்கை டம்பர் பிளேசர் பின்கள் இதுநாள் வரை தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது நகரின் அனைத்து பகுதிகளும் டம்பர் பிளேசர் பின்கள் குப்பைகள் அள்ள போதுமான அளவு இல்லை. நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆய்வு செய்த பொழுது மேலும் புதியதாக 6 எண்ணிக்கை டம்பர் பிளேசர்</td></tr>
</table>

| | |
|---|---|
| | பின்கள் வாங்க அறிவுருத்தியதின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4,25,000/—ஐ பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>நகர்மன்ற தீர்மான எண்—165 நாள்.25.01.2018. அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்.6 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சித்தமல்லி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பெறப்பட்டு நகராட்சி அலுவலகத்திலுள்ள 12.00 இலட்சம் லிட்டர் மற்றும் வ.உ.சி நகரில் உள்ள 2.00 இலட்சம் மேல்நிலை தொட்டி மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கோவில்பத்து, பனமங்கலம் மற்றும் துறையூர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள 30000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மின் மோட்டார்களை இயக்கவும் அப்பகுதியில் உள்ள குளோரினேஷன்பிளாண்டினை இயக்கவும் இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறையில் ஒப்பந்த அடிப்படையில் Out Source முறையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கொள்ள Lr,No.539/2005/F.3 நாள்,28.1.2005—ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி பொதுப்பணிதுறை விலை விகித்தின்படி Electrician Grade-II நிலையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏற்கனவே நியமிக்கப்பட்ட பணியாளர்களுக்கு 31.03.2018 ஒப்பந்த நாள் முடிவடையும் நிலையில் உள்ளதால், 01.04.2018 முதல் 31.12.2018 வரை 9 மாதங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தற்போது உள்ள 2017—18 பொதுப்பணித் துறை விலை விகிதத்தில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.425.19 வீதம் மூன்று நபர்கள் கொண்டு பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ. 3,45,000/— ஐ இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>நகர்மன்ற தீர்மான எண்—166 நாள்.25.01.2018. அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்.7 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்—23 கோவில்பத்து பகுதியில் அமைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாய் மிகவும் பழுதடைந்துள்ளதால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் எதிர்வரும் கோடைகாலத்தின் வறட்சியினை போக்கவும் பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய வேண்டியது அவசியமாகிறது எனவே மேற்படி பகுதியில் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் நேரடி ஆய்வில் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய புதிய குடிநீர் பகிர்மான குழாயினை மாற்றி அமைத்திட அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6.40 இலட்ச்சத்திற்கு பொது மக்களின் நலன் கருதி நகராட்சி பொது நிதி திட்டத்தின் கீழ் பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>நகர்மன்ற தீர்மான எண்—167 நாள்.25.01.2018. அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்.8 | சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் உள்ள சமையல் கருவிகள், எரிவாயு அடுப்புகள், நீராவி அடுப்பு, மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஆகியவற்றை பராமரிப்பு பணி மேற்க்கொள்ள |

<table>
<tr><td></td><td>வேண்டியது அவசியமாகிறது. அம்மா உணவகத்தில் பொது மக்களுக்கு உணவு தடையின்றி விநியோகம் செய்ய வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பின் படி நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறிவுரையின் படியும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.00 இலட்ச்சத்திற்கு பொது மக்களின் நலன் கருதி நகராட்சி பொது நிதி திட்டத்தின் கீழ் பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>நகர்மன்ற தீர்மான எண்–168 நாள்.25.01.2018. அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>பொருள் எண்.9</td><td>இந்நகராட்சியின் பொது நிதி திட்டம் -2017-2018 ன்கீழ் சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தெருக்களில் குடிநீர் விநியோக குழாய் உடைப்புகளை சரிசெய்யும் பணிக்கு ரூ.5,00,000/- பணி செய்திட 15.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டு தொகை</th><th>ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>ஒப்பந்த மதிப்பீட்டைவிட</th></tr>
<tr><td>1</td><td>ஆர். தனராஜ் ஒப்பந்ததாரர் சீர்காழி</td><td rowspan="2">ரூ.4,30,312.60</td><td>ரூ.4,29,187.60</td><td>(-) 0.26 % (குறைவு )</td></tr>
<tr><td>2</td><td>ஆர். கலைவாணன் ஒப்பந்ததாரர் சீர்காழி</td><td>ரூ.4,37,376.00</td><td>(+) 1.64 % ( அதிகம் )</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.தனராஜ் ஒப்பந்ததாரர் ,சீர்காழி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டைவிட (-) 0.26% குறைவாக உள்ளதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>நகர்மன்ற தீர்மான எண்–169 நாள்.25.01.2018. அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
</table>

(ஒம்) திருமதி.மு.அஜிதாபர்வின்.B.SC.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–25.01.2018

/உண்மை நகல்/

ஆணையர்
சீர்காழி நகராட்சி.

COUCIL-2016 NOV SP OFFICER